**Crl.Misc.39**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR**
**Case No. S.T.C.No. 185/2024**

Deposition of witness for complainant P.W.2 Date : 05.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | அனித்சங்கர் | Village : | கணபதி |
| Father's Name : | சங்கரய்யா | Taluk : | கோவை வடக்கு |
| Age : | 35 | District : | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of February, 2026 **(Complainant, Accued Present )**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை.**

நான் தற்போது கனரா வங்கி அன்னூர் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் இந்த வழக்கில் இன்று சாட்சியமளிக்க வந்துள்ளேன். கான்ஸ்டன்டினா எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு மற்றும் நடப்பு கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர் என்றால் சரிதான். அவரது நடப்பு கணக்கு எண். 6147307000859 என்றால் சரிதான். அந்த கணக்கின் வரவு செலவு பட்டியல் கொண்டு வந்துள்ளேன். அதில் கடந்த 2023 ஜுலை 1ம் தேதி எம்.சுரேஷ் என்பவரது வங்கி கணக்கிற்கு புகார்தாரரின் வங்கி கணக்கில் இருந்து காசோலை பரிவர்த்தனை மூலம் பணப்பரிமாற்றம் நடந்துள்ளது. அந்த பரிமாற்றத்தின் மதிப்பு ரூ.2,00,000/-. (**அந்த வரவு செலவு பட்டியலின் சான்று நகல் பு.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). புகார்தாரரின் சேமிப்பு கணக்கு எண். 6147220001255З. அந்த கணக்கில் இருந்தும் எம்.சுரேஷ் என்பவரது வங்கி கணக்கிற்கு காசோலை பரிவர்த்தனை மூலமாக கடந்த 2023ம் தேதி ஜுலை 1ம் தேதி ரூ.1,00,000/- நடந்துள்ளது. (**அந்த வரவு செலவு பட்டியலின் சான்று நகல் பு.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எங்கள் வங்கி கணக்கில் சில வருடங்களாக கணக்கு பராமரித்து அவர் நடத்தி வரும் பள்ளியின் வங்கி கணக்கும் எங்கள் வங்கியில் பராமரித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரர் தனிப்பட்ட வங்கி கணக்கும் பள்ளிக்கான நடப்பு கணக்கும் தனித்தனியாக பராமரித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். அவர்களுடைய பள்ளி கணக்கின் எண் என்ன என்றால் 6147307000859. நான் கூறிய காசோலையின் அடிப்படையிலான பணபரிவர்த்தனை எந்த வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது காசோலை அடிப்படையிலான பண பரிவர்த்தனை என்பதால் இந்த வரவு செலவு பட்டியலில் அது தெரியாது. அது தொடர்பான ஆவணங்கள் என்னால் கொண்டு வர முடியுமா என்றால் ஆவணங்களை சரிபார்த்து கொண்டு வர முடியும். அது தொடர்பான ஆவணங்கள் பழைய ஆவணங்கள் என்பதால் நான்அதை வங்கியில் தேடிப் பார்த்து தான் சொல்ல முடியும். பொதுவாக 5 வருடங்கள் தான் அது போன்ற ஆவணங்களை பராமரிப்போம். அடுத்த முறை அந்த ஆவணத்தினை என்னால் கொண்டு வர முடியுமா என்றால் தேடிப்பார்த்து

சொல்கிறேன். இந்த வழக்கின் பணபரிமாற்றம் நடந்து 5 வருடங்கள் முடிவு பெறவில்லை என்றால் சரிதான். அதனால் என்னால் கொண்டு வர முடியும் என்றால் சரிதான். இந்த வங்கி கணக்கு எண் பள்ளி தொடர்பான வங்கி கணக்கு என்றால் சரிதான். அதில் இருந்து இரண்டு இலட்சம் பரிமாற்றம் நடந்ததாக நான் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் புகார்தாரரின் தனிப்பட்ட வங்கி கணக்கில் இருந்து ரூபாய் ஒரு இலட்சம் அளித்ததாக சாட்சியமளித்துள்ளதை பொருத்து அந்த ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியமளிக்க முடியும் என்றால் சரிதான். அந்த காசோலை பரிவர்த்தனை எந்த வங்கியில் உள்ள வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது என்ற ஆவணங்களை நான் தாக்கல் செய்தால் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்ய ஏதுவாக இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(மேற்கொண்டு குறுக்கு விசாரணை மற்றும் ஆவணங்கள் கொண்டு வர வேண்டி இந்த குறுக்கு விசாரணை மேற்கொண்டு ஒத்தி வைக்கப்படுகிறது.)

Sd/-V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur.

| |
|---|
| Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct. |